வள்ளுவனார் சுரந்தபா வையத் துணை.

# குறள் மலர்

மாலை-1. பராபவ—ஐப்பசி. மலர்-11

# திருக்குறள்

அறத்துப்பால்.

11

இல்லற இயல்.

## செய்ந்நன்றி அறிதல்.

ஆசிரியர்; திருக்குறள்மணி; நாவலர்; அ. இரத்தினசபாபதி

உரிகம். கோலார் தங்கவயல்-2.
(மைசூர் மாநிலம்)

# குறள் மலர்

## சிறப்பாசிரியர் குழு.

1. டாக்டர். சேவியர் தனிநாயக அடிகளார்.
எம். ஏ; எம். லிட். பிஎச். டி.
தலைவர்; இந்தியத்துறை; மலாயாப் பல்கலைக் கழகம்,
கோலாலம்பூர், மலேசியா.

2. டாக்டர். மா. இராசமாணிக்கனார்.
எம். ஏ; எல். டி. எம். ஓ. எல். பிஎச். டி.
தமிழ் ஆராய்ச்சித்துறை; சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை

3 டாக்டர் மெ. சுந்தரம். எம் ஏ; எம். லிட். பிஎச். டி.
தமிழ்த்துறை; மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

4 டாக்டர். வி. ஐ. சுப்பிரமணியம். எம். ஏ; பிஎச். டி.
தமிழ்த்துறைத் தலைவர்; கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

5 முத்தமிழ்க் காவலர்; கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,
திருச்சிராப்பள்ளி.

6. பேராசிரியை மேரி மாசில்லாமணி அம்மையார்.
எம். ஏ; எல். டி. தமிழ்த்துறைத் தலைவர்;
கிறித்துவ மகளிர் கல்லூரி, சென்னை

7 பேராசிரியர். பண்டித, இரா. மீனாட்சி சுந்தரனார்
எம் ஏ; எம் ஈ; எஸ்.
'குறள் குடில்'; கோயம்புத்தூர்

8 பேராசிரியர். சாலை இளந்திரையன். எம் ஏ; எம். லிட்.
தமிழ்த்துறை; தில்லிப் பல்கலைக் கழகம். தில்லி.

9. பேராசிரியர். நா. சுப்பு ரெட்டியார்.
எம். ஏ. பி. எஸ்ஸி; எல். டி.
தமிழ்த்துறைத் தலைவர்; வேங்கடேசுவரா பல்கலைக் கழகம்,
திருப்பதி.

10. பேராசிரியர். வ. பெருமாள்.
எம். ஏ; பி. டி. எம். ஆர். ஏ; எஸ்.
தமிழ்த்துறை, முதல்நிலைக் கல்லூரி, கோலார் தங்கவயல்.

பொறுப்பாசிரியர்;

திருக்குறள் மணி, காவலர். அ. இரத்தினசபாபதி,
'குறள் மலர்'-உரிகம் அஞ்சல்,
கோலார் தங்கவயல்-2. (மைசூர் மாநிலம்)

## மலர்ந்த குறள்மலர் சூடி வாழ்வீர்.

செந்தமிழ்ப்பூங் காவதனில் செழித்துத் தோன்றித்
திகழும்அறம் பொருள்இன்பச் செடியில்மேவிப்
புந்தியுளம் குளிரப்பல் பொருள் தழைத்துப்
போற்றுபல கருத்துமணம் கமழப் பூத்துச்
சிந்தனைசெய் தொறும்இன்பச் செழுந்தேன் சொட்ட
தீந்தமிழ்த்தாய்ப் புகழ்வண்ணம் திகழ யாரும்
வந்தனைசெய் வள்ளுவச்செங் கதிரோன் தன்னால்
மலர்ந்தகுறள் மலர்சூடி மகிழ்ந்து வாழ்க.

கவிஞர். காழி. த. சுந்தரேசன்.

*   *   *

## வையகமெங்கும் வள்ளுவன் குறள்.

நல்ல முயற்சி; நாட்டுக்குத் தேவையான முயற்சி. வள்ளுவன் குறளை வையகமெங்கும் பரப்புமுன், அதன் சீரிய கருத்துரைகளைச் செந்தமிழ் நாடெங்கும் பரப்பி உணர்த்த வேண்டியது நமது முதற் கடமையாகும். அந்நெறியில் 'குறள் மலர்' மணம் வீசுவது அறிந்து மகிழ்ச்சி! வாழ்க அதன் பணி!

கவிஞர். அரு. சோமசுந்தரம், எம். ஏ; பி. டி.
தலைவர், இராமநாதபுரம் மாவட்டத்
தமிழாசிரியர் கழகம், சண்முகநாதபுரம்.

*   *   *

## பரவச் செய்தல் வேண்டும்.

உலக மக்கள் எல்லோராலும் போற்றப்படும் ஒரு தனி நூல் திருக்குறள் ஒன்றே ஆகும். இது சாதி சமயம் கடந்த நூல். இந்நூலின் பொருள் ஆழம் தெரிந்தே பதின்மர் சிறப்பு முறையில் முன்னர் உரை கண்டனர். மாபெரும் புலவர்களும் இதனைத் தமதம் நூலில் எடுத்து ஆண்டு கொண்டனர். இத்தகைய அரும்பெரும் நூலை மாணவர்களிடையும், ஏனையோரிடையும் பரவச்செய்தல் வேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டு, 'குறள் மலர்' வெளிவருதல் அறிந்து நான் பெரிதும் மகிழ்கின்றேன். இதனை யாவரும் வரவேற்றுப் போற்றுவார்களாக.

பேராசிரியர், பாலூர், கண்ணப்ப முதலியார்,
எம். ஏ. பி. ஓ. எல்., சென்னை.

# திருக்குறள்.

## அறத்துப்பால்.

மாலை-1 | பராபவ; ஐப்பசி | மலர்-11

## 11. செய்ந்நன்றி அறிதல்.

1 செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. (101)

2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (102)

3. பயன் தூக்கார் செய்தஉதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (103)

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (104)

5. உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106)

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (107)

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (108)

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று ள்ளககெடும். (109)

10 எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)

CONNEMARA PUBLIC LIBRARY
5 DEC

# நன்றி மறவேல்!

1. பூமியினும் பெரிது யாது?

2. மலையினும் பெரிது யாது?

3. கடலினும் பெரிது யாது?

இம்மூன்று வினாக்களுக்கும் தக்க விடை தரும் ஒருவரைத் தனது முதல் அமைச்சர் ஆக்குவதாக அறிவிக்கிறான், மன்னன் அநபாய சோழன், பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் பெருமானின் தந்தை ஓர் பெரும் புலவரானமையின், அவருக்கும் அவ்வறிவிப்பு ஓலை வருகிறது. சிந்தனையில் ஆழ்கிறார்; தக்க விடைகள் கிடைப்பதாயில்லை அவருக்கு. சேக்கிழார் பெருமானின் பள்ளிப்பருவம் அது. பள்ளியில் இருந்து திரும்பிய மைந்தன், தந்தையின் கை ஓலையை வாங்கிப் பார்க்கிறார். "இதற்கா இவ்வளவு சிந்தனை" என்று வியக்கிறார்! என்ன? விடை அவ்வளவு எளிதா? தனயன் முகத்தை வினாக்குறியுடன் நோக்குகிறார் தந்தை! மூன்று வினாக்களுக்குமான விடைகள், மூன்று குறட்பாக்களாக வெளிவருகின்றன சேக்கிழார் வாயிலிருந்து;

1. "காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

2. "நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

3. "பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

முதற் குறளும், மூன்றாம் குறளும் இந்த 'செய்ந்நன்றி அறிதல்' அதிகாரத்தில் உள்ளன; 'அடக்கமுடைமை' அதிகாரத்தில் வருவது

மூன்றும் குறள். இம்மூன்று குறட்பாக்களும் அநபாயனின் அமைச்சர் பதவியைப் பெற்றளித்து விடுகின்றன சேக்கிழார் பெருமானுக்கு.

ஞாலத்தினும், மலையினும் கடலினும் பெரியனவற்றைக் காட்டும் இச்சிறு குறட்பாக்கள், பெரியனவான அம்மூன்றையும்விடப் பெரியவை தானே! அத்தகைய மாபெரும் பொருள்செறி குறட்பாக்கள் 1330-ஐ உலகுக்கீந்த வள்ளுவர் பெருமானின் பெருமை, இவையனைத்தையும் விடப் பெரிது!

திருக்குறளில் மொத்தம் 133-அதிகாரத் தலைப்புகள் உள்ளன. அவற்றுள், 'அறிதல்' என்ற சொல்லோடு அமைந்தவை எட்டு. அறத்தில் 2; பொருளில் 5; இன்பத்தில் 1-ஆக அமைந்துள்ளன.

'அடக்கமுடைமை; அருளுடைமை: அறிவுடைமை என்பன போன்ற உடன்பாட்டு முறையில் 'நன்றியுடைமை' என்றோ. அன்றி, 'அழுக்காறுமை; இன்னா செய்யாமை; கல்லாமை' போன்று எதிர் மறையில் 'நன்றி மறவாமை' என்றோ நவின்றாரல்லர்; இகல், இரவு என்பன போன்று 'நன்றி' என்று மட்டும் தலைப்பீந்தும் நின்றாரில்லை. செய்+நன்றி+அறிதல் எனக் கொண்டு, 'செய்ந்நன்றி அறிதல்' என அமைத்தார் குறள் ஆசான். ஏன்?

எமது சிறு போழ்தில் தச்சை சீலஸ்ரீ இலக்குமணப் போற்றி எனும் பேராசானிடம் குறட்பாடம் பயிலும்பேறு கிட்டிற்று. திருக்குறளில் பெரும்புலமை பெற்றிலங்கியவர் அப்பெரியார். அக்காலத்து, அண்மையில் உறைந்த நாவலர் பாரதியார், பேரறிஞர் பூரணலிங்கம் பிள்ளை போன்ற தமிழறிஞர் பலர் அவ்வப்போது போற்றி ஐயா அவர்களை அணுகி குறள் நுணுக்கம் பற்றி விவாதிப்பதுண்டு. அவ்வாறான ஓர் வேளையில் 'செய்ந்நன்றி அறிதல்' என்று வள்ளுவப் பேராசான் தலைப்புத் தந்ததன் உட்கருத்து யாதாயிருக்கும் என அவர்கள் ஆராய்ந்தனர். அப்போது உடனிருந்த எமது சிந்தையிற் பதிந்த சில கருத்துக்கள் கீழே வருவன:-

'செய்ந்நன்றி' என்ற பொருளின் அருமையை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படைத்தன்மை, பெருமை இவற்றை நாம் நன்றாகப் புரிந்து கொள்வது, அதன் தன்மையைப் பேணிப் போற்றிட உதவும். 'நுனிப்புல் மேய்தல்' போலன்றி ஆழ, வேர்வரை சென்று ஆராய்ந்து அறியவேண்டும் என விரும்புகிறார் வள்ளுவப் பேராசான்.

"அறம் கிடந்த நெஞ்சு" என்பது நளவெண்பாவில் வரும் ஒரு தொடர். இதை, ''அறம் ஆர்ந்த நெஞ்சு'' என்று கூறினால், மேலே குறித்த கிடந்த என்ற சொல் தரும் அழுத்தம்-பொருட்பொலிவு இதில் ஏற்படக் காண்கிலோம்.''சீத மதிக்குடைக் கீழ்ச்செம்மை அறங்கிடப்ப' என்பது மற்றோர் தொடர். இங்கும், 'கிடப்ப' எனுஞ் சொல் தரும் அழுத்தத்தைக் காணலாம். அரசனது அந்த வெண் கொற்றக் குடையின் கீழே செம்மையானது தவங்கிடந்ததாம்! எத்தனை பொருட்பொலிவு! இவை போன்றே, இங்கு செய்நன்றியை அறிதல் என்பதில் பொருட்பொலிவு உண்டு. இன்னும்;

"வான்கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்..."

என்ற வடலூர் வள்ளலாரின் பாடலில், 'வான்கலந்து' என்றதன் எதுகை நோக்கி ''நான் கலந்து'' என்று பாடவில்லை. வள்ளலார் கருத்தென்ன? மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தை வெறும் வாயால் மட்டும் பாடிச் சுவைக்கவில்லை வள்ளலார் பெருமான். வாசகக் கருத்தோடு தானும் கருத்துக் கலந்து-(உள்ளுணர்ந்து, சுவைத்து, அனுபவித்து) ஊன்கலந்து, உயிரும் கலந்து உணர்ந்தார் வடலூர் முனிவர். இப்படியாகக் கலப்பது அனைத்தும் காட்டுவதென்ன? பொருளின் பொலிவு; உள் உணர்ச்சி; உயிர் ஒட்டம்! அது போன்றே. செய்நன்றியை அறியுங்கால், அக்கருத்துக்கு அழுத்தமும், உயிர் ஓட்டமும் உண்டாகிறது.

பிறர் செய்த உதவியின் திறத்தை, தன்மையை, அருமையை, அச் செய்கையின் பின்னால் இருக்கும் பண்பின் பெருமையை நாம் உள்ளூர உணர்ந்தாலல்லது, அந்த உதவியை மறவாத்தன்மை உள்ளத்தில் ஊன்றி நிற்காது. இந்த அதிகாரத்து எட்டாவது குறள் கூறும் "நன்றி மறப்பது நன்றன்று;'' மறவாமை வேண்டும் என்பது உட்கிடக்கை இதற்கு, நன்றியின் பெருமை இத்தன்மைத்து; இத்துணை உயர்வுடைத்து, இத்துணை ஆக்கம் உடைத்து என்பனவற்றை ஆய்ந்து அறிதல் உறுதுணையாய் நிற்கும்.

இதுபோன்றே இனி வரும் 'அறிதல்' தொடர்பு அமைந்த அதிகாரங்களிலும் அதனதன் பொருளை ஆழ்ந்து அறியுங்கால்,ஆங்காங்குள்ள பொருள் ஆழத்தை நன்கு புரிந்து கொள்ளலாம்.

பிறர் செய்த உதவியைஎன்றென்றும் மறவா திருத்தல் நம்கடமை. அவருக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோமே; கைம்மாறு செய்து அக்கடனைத் தீர்க்க வேண்டுமே, என்ற எண்ணம் எப்போதும் மனத்தை விட்டகலாமல் உள்ளூர ஊறி நிற்க வேண்டும.

"பெற்றதைத் திரும்பக் கொடுத்தவுடன் இதர கடன்களும் தீரும்" நன்றிக்கடனே! கைம்மாறு செய்த பின்னும், அக்கடன் தீர்ந்ததாக எண்ணலாகாது. நினைவிலேயே இருக்கவேண்டும்!

ஆனால், இதற்காக மட்டிலுமா வள்ளுவர் அவ்வாறு கூறினார்? அன்று. நன்றி மறவாது, அவ்வுணர்ச்சியைப் போற்றி வருவதால், அந்த உதவி பற்றிய இனிய எண்ணம் எக்காலத்தும் உள்ளத்தில் ஊன்றி உவகை ஊட்டி நிற்கும். நன்மையும், இனிமையும் கலந்து நம் உள்ளத்தில் அறம் கிடப்பதாகும்! கைம்மாறு செய்யும் வாய்ப்பினை நோக்கி உள்ளம் துடித்துக் கொண்டே இருக்கும்! அன்பு என்பது மலர்ந்து அருள் ஆவது போல, நன்றி பற்றிய நம் உள்ளத் துடிப்பின் முதிர்ச்சியால், அதுவரை நமக்கு எவ்வித உதவியும் செய்யாதவர்க்கும்—முன் அறிமுகம் அற்றார்க்குங்கூட, எவ்விதக் கைம்மாறும் கருதாமல் ஓடிச் சென்று விரைந்து உதவத் தூண்டும். எவ்வளவு அரிய, இனிய நிகழ்ச்சி அது!

நன்றி பற்றிய நல்ல சிந்தனை நம் உள்ளத்தில், ஊறிக்கிடத்தலால், 'நவில் தொறும் நூல் நயம்போல் அது பின்னும் பெருகும். பிறர்க்கு உதவவேண்டும். என்னும் அறஉணர்ச்சி உள்ளத்தில் பொங்கிவழியும். உள்ளத்தினால் இயற்றும் ஓர் அறமாகும் இது! இப்பிறவியில் மட்டிலுந் தானா இது? அன்று! ஒருமைக் கண் தான்கற்றகல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்தல்லவா? இதே அதிகாரத்தின் ஏழாவது குறளில் வள்ளுவர் கூறுகிறாரே. தம்முடைய துன்பத்தைப்போக்கி உதவியவரின் நட்பை பல்வேறு வகையான பிறவியிலும் மறவாது போற்றுவர் பெரியோர். என்று இப்பிறவியில் உள்ளத்தில் அதுஊறிக்கிடந்ததால்தானே இனிவரும்பிறவிகளிலும் அது தொடர்ந்துவந்து நட்பைநாடிவளர்க்கும்.

பிறர் செய்த நன்மையை என்றென்றும் நாம் மறத்தல் கூடாது என்று கூறும் ஒரே குறளில், அவர் நமக்குச் செய்த தீமைகளை அப்போதே மறந்து விடவேண்டும் என்று அறிவிக்கும் வள்ளுவரின் தனிச் சிறப்பையும், உள்ளத்தின் உயர் பாங்கையும் "நன்றி மறப்பது நன்றன்று ..., என்ற எட்டாவது குறளில் இனிது காண்கிறோம்!

எக்காரணங் கொண்டும்-யாருக்காகவும் தீமை. தீய எண்ணம் நம் மனதில் புகவே இடம் தரலாகாது என்பது வள்ளுவப் பெருந்தகையின் கருத்து! 'பிறர்பால் குறை காண்பதையே கருத்தாகக் கொண்டு திரியாதே; மற்றவர்களிடம் நீ குறை காணுவது போல் உன்குற்றங் குறைகளை நீ எண்ணிப்பார். அதன் பின் உலகில் மக்களுக்குத் தீமை ஏது? என்று (அதிகாரம் 19-தில்) கூறும் வள்ளுவனாரின் உள்ளக் கருத்தை இங்கு இணைத்து உணருவது நலம்.

தினைத்துணை—பனைத்துணை, எத்துணை இனிய இணைப்பு! நன்றியின் பயன் தெரிவார்பற்றிப் பெருமையோடு பேசுகிறது இக்குறள்! ஒருவரின் உள்ளப் பாங்கினைப் படம் பிடித்துக் காட்டுகிறது இது. அந்த இனிய உயர் பண்பு பனைபோல் உயர்ந்தது, தினையின் அளவிலிருந்து' என்றும் கொள்ளலாமே!

தினையளவு சிறிய உதவியையும் பனையளவு பெரிதாக மதிப்பவர் யார்? 'பயன் தெரிந்தவர்கள்' என்று அக்குறள் கூறுகிறது. பயன் தெரிய மாட்டாதவர்களோ?—பனையளவு பெரிய உதவியைப் பிறர் தமக்குச் செய்தாலும், (பயன் தெரியமாட்டாத) இப் பிறவிகள், அதைத்தினை அளவு சிறியதாகவே எண்ணுவர் என்பதையும் இக்குறள் கூறாமற் கூறி விடுகிறது!

"தினையனைத் தேயாயினுஞ் செய்த நன்றுண்டாயிற்
பனையனைத் தாவுள்ளுவர் சான்றோர்; பனையனைத்
தென்றுஞ் செயினு இலங்கருவி நன்னுடை
நன்றில் நன்றறியார் மாட்டு!!

என்று, வள்ளுவருக்குப்பின் எழுந்த பாடல்,மேலே குறித்த 'பிறவிகளை'க் குறித்து எழுந்ததே!

நன்றியின் பயன் அறியாத இப்'பிறவிகளை'யும் நல்லவர்களாக ஆக்கிவிடும் இன்னொரு வகை மனிதப் பிறவிகளும் உலகில் உண்டு! தமக்கு நன்மை செய்தார்க்கே தீங்கு செய்யும் கீழமைக் குணமுடையாரை என்னென்று அழைப்பது? வேங்கை வரிப்புலிக்கு நோய்தீர்த்த விடதாரி அங்கேயே அதற்கு ஆகாரமானன்; புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரம் கல்லின்மேல் வீசியெறிந்த மட்கலமாக நொறுங்கி விடுகிறது. இவர்களைப் 'பாங்கு அறியாத புல்லறிவாளர்''என்றுகவி கூறுகிறது.இதனை,

மிக நுண்ணிய கருத்துக்கொண்ட—தத்துவ அடிப்படையில் விளக்கும் குறள் ஒன்றையும் இவ்வதிகாரத்தில் காண்கிறோம். ஒருவர், பிறர் தமக்குச் செய்த ஓர் உதவிக்குக் கைம்மாறு செய்ய விழைகிறார். எந்த முறையில்? எந்த அளவில்? அதைச் செய்வது, என்றவினு அவருக்குள் எழுகிறது காசுக்குகாசு; சரிகுச்சரி: எடைக்குஎடை என்ற முறையிலா? பின்,வேறு எவ்வாறு?

அண்மையில் சென்னை நகரில் ஒன்று நிகழ்ந்தது வழிப்போக்கர் ஒருவர், ஏதோ ஓர் வாகனத்தால் மோதப் பட்டு, படுகாயத்துடன், உதிரக் குட்டையில் மூச்சற்றுக்கிடந்தார்; பார்த்துக் கொண்டேபோயினர் பலர்;

சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா நின்றிருந்தனர் சிலர்; அந்நிலையில், கூலி வேலை செய்யும் பெண் ஒருத்தி அதைக் காண்கிருள்; பதறி ஓடி ஓர் வாடகை விரைவூர்தி வண்டியைக் கொண்டுவருகிருள்; கிடப்பவரைத் தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு சென்று, மருத்துவமனையில் சேர்க்கிருள்; அதன்பின் மருத்துவர் பொறுப்பேற்கிருர். அதுவரையில் அம்மனிதரின் உயிர் நீங்கிவிடவில்லை என்பதை அறிந்து, அந்த ஏழைப்பெண்மணி மகிழ்ச்சியடைகிருள்; தன் முந்தானையின் முடிப்பை அவிழ்த்து, தான் கூலிவேலை செய்து தேடிய சில்லரைக் காசுகளை விரைவூர்தி ஓட்டியிடம் கொடுக்கிருள், வண்டிச்சத்தமாக! ஆனுல், பெருந்தன்மை மிக்க அவர் பணம் பெற மறுத்துவிட்டுப் போய்விடுகிருர். ஆபத்திற்குள்ளான அந்த மனிதர் பிழைத்துக்கொண்டார்.

அம்மனிதர் அந்த ஏழைப்பெண்ணுக்கும். வண்டி ஓட்டிக்கும் எவ்வகையிலும் உறவினரா? இல்லை; அவர் யாரோ; அவர்கள் யாரோ!

இந்த நற்செயலைப் பாராட்டிப் போலீஸ் அதிகாரி, அவர்களுக்கு வெகுமதியளித்தார். ஆனுல், அவ் ஏழைப்பெண்ணும், வாகனவோட்டியும் ஈந்த உதவியின் விலை என்ன? சிந்திக்க.

விரைவூர்திக்காரர் ஒரு கல் தொலைவு-மருத்துவ மனைக்கு ஆபத்தில் சிக்கியவரைக் கொண்டுவந்தார்: சாதாரண சத்தம் ஒரு வெள்ளிப் பணமாக இருக்கலாம்; அப்பெண்மணி கூலிவேலை செய்பவள்; அவளும் ஒரு வெள்ளிப் பணம் சம்பாதிக்கும் காலத்தை இவ்வுதவிப் பணியில் செலவிட்டாள். அதற்காக, ஆபத்திற் சிக்கி, அவ்விருவரும் காலத்திற் செய்த உதவியால் உயிர் பிழைத்தவர் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு எம்முறையில்?—எந்த அளவில் இருத்தல் ஏற்கும்? அவர்கள் சம்பாதித்திருக்கக் கூடிய ஒவ்வோர் வெள்ளிக்காசை அவர்களுக்கு அவர் கைம்மாருகக் கொடுக்கக் கருதினுல், அது எவ்வாறு மதிக்கப் பெறும்? அல்லது அம் மனிதர், நன்றிப் பெருக்கால் ஆளுக்கு ஒரு இலட்சம் வெள்ளிப் பணம் வழங்குகிருர் எனில் அது எதைக் குறிக்கும்?

உதவி ஏற்றவர் பெற்ற உதவியின் அளவைப் பொறுத்தன்று நன்றிக்கடன்; உதவி ஏற்றவரின் பண்பின் அளவைப் பொறுத்து அவ்வுதவியின் தரமும் சிறிதாகவோ, பெரிதாகவோ மதிக்கப் பெறும்.

''உதவி வரைத்தன்று உதவி...'' எனும் ஐந்தாவது குறள் இதைத்தான் பேசுகிறது! வள்ளுவரின் தத்துவ ஞானம் சுடர் விடுகிறது இங்கு!

உதவி செய்யப்பட்டவர் மனதில் அவ்வுதவி காரணமாய் உறுவது மன நெகிழ்ச்சி; உதவி செய்தவர் பெறுவது மனமகிழ்ச்சி!

ஒருவர் செய்த தீமையை அப்போதே மறந்துவிட வேண்டும்என்று வள்ளுவர் இங்கு கூறும் இககுறள் கருத்தோடு, ''ஏதிலார் குற்றம் போல தங்குற்றங்காணின்'' என்ற, புறங் கூறாமை அதிகாரக் குறட் கருத்தையும் இணைத்து நோக்குவது கருத்திற்கு விருந்தாம்.

இதுபோன்றே பிறர் உனக்குச் செய்த தீங்கை நீ உடனே மறந்துவிடு என்று இங்கே கூறியவர், இன்னும் ஒருபடிமேலே சென்று ''உனக்குத் தீமை செய்தவனுககு நீ நன்மை செய்துவிடு'' என்று மாபெரும் அறம் உரைக்கும் அருட்பாங்கை, 'இன்னா செய்யாமை' அதிகாரக் குறளில் கண்டு மகிழலாம். இங்கு அதனை இணைத்து நோககி, எண்ணி எண்ணி இன்புறலாம். இத்தகை மாபெரும் மாண்புகளே வள்ளுவரை வானளவு உயர்த்தி விடுகின்றன!

''பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்'' எனவரும் மூன்றாவது குறளின் நயன் மிகச் சிறப்புடைத்தாம்! கடல்நீர் ஆவியாகி, மேகமாகி, நீராகி, ஆறாகி மீண்டும் கடலுக்கே வந்து சேருகிறது. இதனை முற்றிலும் கடல் செய்த கைம்மாறு பெறாத உதவி என்று கூறுவதற்கில்லை; நீர் மீண்டும் கடலுககே போய்ச் சேர்ந்துவிடுகிறதல்லவா? - அதனாலேயே ஆசிரியர் கூறினார், 'கைம்மாறு கருதாது செய்த உதவி கடலினும் பெரிது' என்று! இதன் அருமையை முழக்குகிறது மூன்றாம் குறள்!

இதற்கு முந்திய 'இனியவை கூறல்' அதிகாரத்தில், 'நல்லன சொல்ல வேண்டும்' என்றார். இங்கே, நல்லன நினைக்க வேண்டும் என்கிறார். வள்ளுவரின் உள்ளப் பாங்கை உன்னி உன்னி மகிழலாம் நாம்!

## நன்றி.

* இங்கு தங்கவயலில் சுரங்கப் பேரதிகாரியாயிருந்து ஓய்வுபெற்று இப்போது கோவாவில் இரும்புச் சுரங்கங்களின் பேரதிகாரியாகப் பொறுப்பு ஏற்றிருக்கும் அன்பர் திரு. வி. எம். சுந்தரராசன் அவர்கள், 'குறள்மல'ரின் முதல் இதழை வெளியிட்டு ஆக்கந்தந்த அருளாளர் ஆவர். அவர்கள், இன்று 'குறள் மல''ருக்கு இருபத்து ஐந்துரூபாய் அன்பளிப்பு வழங்கியுள்ளார்கள். அப்பெரியாருக்கு எமது அகங்கனிந்த நன்றி உரித்து.

* குறள் மலரின் சிறப்பாசிரியர் குழு அமைப்பைப் பாராட்டி அன்பர் பலர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். பரந்த அளவில், பலதரப்பினருமான தலைசிறந்த அறிஞர் பதின்மர் அமைந்ததானது மலருக்குப் பெருஞ் சிறப்பு அளிப்பது திண்ணம என வரவேற்றுள்ளனர். நல்வாழ்த்தும் நவின்றுள்ளனர். அன்பர்களுக்கு எம் நன்றி.

நல்விருந்து.

# திருக்குறள் அதிகாரப் பத்து.

* பத்துக் குறளுக்குப் புத்துரை நல்கும் "குறள் மல"ரைத் தொடக்கமுதல் படிக்க விரும்பிக் கேட்கும் ஏராள நண்பர்களுக்கும்,

* பத்துப் பேரறிஞர் உள்ளத்தே பூத்து மலர்ந்த புதிய கருத்துக்களைப்போற்றிமகிழும் குறள் நெறியாளர்க்கும்.

* அறத்துப்பாலின் "கடவுள் வாழ்த்து" முதல் "இனியவை கூறல்" வரை மலர்ந்துள்ள பத்து மலர்களின் புதிய தொகுப்பாக,

வெளிவந்துள்ள முதல் பத்து அதிகாரத்தையும் விரிவுரை, மேற்கோள், ஒப்புமைப்பகுதியுடன் தொகுத்து ஒரே புத்தகமாக வெளியிடுகின்றோம். குறள் பத்தின் "மூதற் பத்து" விரைவினில் வெளிவரும்.

விலைவிபரம் பின்னர் அறிவிக்கப்படும். தேவைப்படும் அன்பர்களும், விற்பனையாளர்களும் முன்கூட்டியே தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்,
"குறள் மலர்"

# செய்யாமல் செய்த...

புலவர், நா. தண்டபாணி,
தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப்பள்ளி, வடகாடு.

குறள்-1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. (101)

[பரிமேலழகர்: (செய்ந்நன்றி அறிதல்) அதாவது; தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்திஇல் குற்றம் செய்ந்நன்றி கோறலே யாகலின் அதனைப் பாதுகாத்துக் கடிதற் பொருட்டு, இஃது இனியவை கூறலின்பின் வைக்கப் பட்டது.

தனக்குமுன் ஓர் உதவிசெய்யாதிருக்க, ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தலரிது.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடைய வாகலின் காரணமில்லாத உதவிக்கு ஆற்ற ஆயின. 'செய்யாமைச் செய்த உதவி' யென்று பாடம் ஓதி, மறித்து உதவமாட்டாமையுள்ள இடத்துச் செய்த உதவி என்று உரைப்பாரும் உளர்.]

தமிழர் பண்பாடு தரணியிலேயே தரமிக்கது; தலையாயது அதனை எடுத்துக்காட்டுவனவற்றுள் ஒன்று 'செய்ந்நன்றி மறவாமை'. பிறர் செய்த தீமையையும், தான் செய்த நன்மையையும் மறத்தலும், தான் செய்த தீமையையும் பிறர் செய்த நன்மையையும் உள்ளத்தில் நிலை நிறுத்தலும் பண்புடைமையின் அறிகுறிகளாம்,

மேற்கண்ட "செய்யாமல் செய்த உதவிக்கு" என்ற குறள், செய்ந் நன்றி மறவாமையின் செம்மைப் பண்பினைச் செப்புகின்றது.

செய்ந்நன்றி அறிந்தவனே நன்றி கூறத் தகுதியுடையவன். அவனால்தான் எதிர் உதவி ஆற்ற இயலும்.

ஒருவன் செய்த உதவிக்கு மாற்று உதவி ஆற்றுவதில் சிறப்பில்லை. இஃது, குறியெதிர்ப்பின் பாற்பட்டது.

செய்தார்க்குச் செய்யாவிடிலோ, அது கயமையின் பாற்பட்டதாகும். தீங்கும் பயப்பதாகும். கடையாயது: (எடுத்துக்காட்டு; பாம்பு.)

செய்தார்க்குச் செய்தல் கடமை. இது இடைத்தரத்ததாகும். (எடுத்துக் காட்டு; தெங்கு) செய்யாதார்க்குச் செய்தலே சிறப்பினதாகும். இதுவே தலையாயது. (எடுத்துக்காட்டு; பூப்போன்ற கை தன்னை நாக்க புகழ வேண்டும என்பதற்காகச் சோறு வழங்கவில்லை—நன்னெறி; சிவப் பிரகாசர்.)

இங்ஙனம், முன்பின் தெரியாது, தான் எவ்வகை உதவியும் செய் யாதிருக்கையில், எதிர்ப்பயன் கருதாது செய்யப்பட்ட உதவியின் மதிப் பினை மேற்கண்ட நடுத்தர, இடைத்தரங்களைப்போல அளவிட்டறிதல் இயலாது. ஒப்புமைக்கு ஏலாதாதலின், உயர்த்திக் காட்டித்தான் அதனை உணர்த்தல் இயலும். "பெரிது பெரிது, புவனம் பெரிது" என்றார் ஔவையார். அந்தப் பெரிய புவனத்தையே-வையத்தையே ஈடாகக் கொடுத்தாலும் உதவியும் பயனும் ஒன்றுபட மாட்டா! வையகத்தினும் பெரிதாகிய வானகத்தையுமே சேர்த்துக் கொடுத்தாலும் ஈடாகாது. செய்யாமற் செய்த உதவிக்கு. செய்யாமற் செய்த உதவிதான் இணை. உவமை கூறுதற்கு வேறேதுமில்லை என்பது கருத்து.

'அரிது' என்பதற்கு இருபொருள் உண்டு. அரிது-அருமையானது' (இயன்றாலும் இயலும்; இயலாமலும் போகலாம்; சான்று: குறள் 29, 227 முதலியன) 'அரிது'-முடியவே முடியாது (சான்று; குறள் 8, 16, 886 முதலியன) இப்பாட்டில் (குறள் 101) இரண்டாம் பொருளிலேயே வந்தது. வையகத்தையும் வானகத்தையும் பருப்பொருள்களாகக் கொள் ளலாம். ஆனால், உதவி செய்தலைக் காண இயலாவிடினும், அதனை நுண்பொருளாகவே கொள்ளுதல் வேண்டும். அதிலும், இது மதிக்கத் தக்க நுண் பொருளன்றோ?

இத்தகைய சீர்த்த நுண்பொருள், விலங்குத்தன்மை படைத்தவனை மனிதனுக்குகின்றது; மனிதனைத் தெய்வத்தன்மையுடையவனுக்குகின்றது. ஆகலினன்றோ, இளங்கோவடிகள் வள்ளுவர் வழியில் நின்று உல கோரை முன்னிலைப்படுத்தி "செய்ந்நன்றி கொல்லன்மின" என்று கூறுகின்றார்.

கருத்து:- பிறர் உதவாவிடத்தும், பயன் கருதாது செய்யும் உத வியே பல்வகை உதவிகளுள்ளும மேம்பட்டது. அதற்கு இணை அதுவேதான்.

---

(The gift of) heaven and earth is not an equivelent for a benefit which ia Conferred where none had been recived. (Rev, R, D) *

# காலத்தினுல்...

பேராசிரியர்: பண்டித: இராம. மீனுட்சிசுந்தரனர்.
எம். ஏ; எம். ஈ. எஸ்.
'குறள் குடில்' கோயம்புத்தூர்.

குறள்-2. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (102)

பரிமேலழகர்.

[ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், தன்னை நோக்கச் சிறிதாய் இருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நில வுலகத்தினும் மிகப் பெரிது.]

காலத்தினுல்—பொருத்தமான உரிய பொழுதினுல்,
செய்த —முறையாக ஒருவர் வெற்றிபெறச் செய்த,
நன்றி—நன்மையே விளக்கும் செயல் ஒன்று,
சிறிது—அளவிற் சிறியது,
எனினும் – என்று பொதுவாகத் தோன்றினுலும்,
மாண – மாண்புகள் உண்டாகுந் தகுதியால்,
ஞாலத்தின் —வெளிப் பார்வைக்குப் பெரிதாகத் தோன்றும்
பூமண்டலத்தைக் காட்டிலும்,
பெரிது—(அச்செயல்) பெரிதாகும்.

செய்வதற்குரிய நேரத்தினையும், முறையினையும். ஒழுங்கினையும் சிந்தித்து வெற்றியாக நிறைவு செய்யப் பெற்ற, நன்மை தரும் செயல் ஒன்று, தோற்றத்தாற் சிறிதெனினும் அதனுல் உலகுக்கு விளைவது மாண்பே யாதலால், பூமியாகிய கோளத்தைப் பார்க்கினும் பெரிதாகி விளங்குகிறது.

பூமியாகிய கோலம் எதனையும் பற்றிச் சார்ந்து நில்லாது, பல்வேறு ஈர்ப்புச் சக்திகட்கு ஆட்பட்டு அந்தரத்தில் சுழல்வதால் ஞாலம் என் னும் பெயர் பெறுகிறது.

ஞாலுதல்—சுழலுதல்.

''ஞாலங் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்''

என்று பிறிதோரிடத்திலும் காலங்கருதும் அறிவாற்றல் உடையானை நோக்கி, ஞாலத்தின் எளிமையைக் காட்டுகிறார் கணக்காயர் ஏறும் வள்ளுவனார்.

கருதியது முடித்தற்குரிய ஏற்ற பொழுதையே காலத்தினால் என்று மூன்றாம் வேற்றுமை பெய்து, நன்மை விளைதற்குக் காலமுங் காரணமாம் என்று வகுத்துக் காட்டுகிறார் வள்ளுவப் பெருந்தகையார். உருபு மயக்கமாகக் கொள்ளத் தேவை இன்று.

செய்த என இறந்த காலத்திற் கூறுவதால், வினை முடிந்த நிலையில் தான் பெருமை கருதுக என்கிறார்.

இனி, நன்றி என்னும் சொல்லுக்கு உதவி எனப் பொருள் கூறுவார் உளராலோ எனின், அது குறளாசிரியர் கருத்தன்று என்க; காட்டுதும்;

'தந்தை மகற்காற்றும் நன்றி' எனவும், 'மகன் தந்தைக் காற்றும் உதவி எனவும் வகுத்து கூறியுள்ளாரன்றோ! ஐந்தில்தான் வளையும் என்பதுணர்ந்து, தனது மகனுக்கு ஏற்ற காலத்தில் கல்விச் செல்வம் பொருத்தி, அவையத்து முந்தியிருக்கச் செய்து, அவன் மிக்க அறிவுடைமையால் மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இன்பூட்டுமாறு, மகன் வழி நன்மை செய்கின்றான் ஆதலின், தந்தையின் செயலை 'நன்றி' என்றார். இது பெரிது. ஈடு சுட்ட இயலாது. எனினும், ஏதேனும் பரிசு போன்று கொடுக்கலாம். ஆம்! மகன் தனது ஒழுக்கத்தாலும், அகலக் கல்வியை அவையத்தார் அதிசயிப்ப வழங்குதலாலும் விளையும் புகழைப் பரிசு போன்று தந்தைபால் செலுத்துகின்றான் ஆதலின், மகனின் செயலை உதவி என்றார்.

"உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என உதவியின் பெருமைக்கு எல்லை காட்டிய வள்ளுவர், நன்றியின் பாரிப்பும் பொதுமையும் கருதி வாளா விடுத்தார். இது தெரிவிக்கவே இரண்டு சொற்களையும் வெவ்வேறிடங்களில் கையாண்டுள்ளார் குறளாசான்.

அஃதன்றியும், தீயோர்தம்முள் உதவி தீங்கு விளைக்கலாம். ஆனால், நன்றிக்கு வித்து நல்லொழுக்கம் அல்லவா? நன்றி என்பதால் உதவியைக் குறித்திருப்பாரேல், வள்ளுவர் 'காலத்தினாற்செய் உதவி சிறிதெனினும்'—என்றே தளை தவறாது யாத்திருக்கலாமே!

இயற்கையின் அங்கமாகிச் சுழன்று, குறிப்பிட்ட காலக் கணக்கில் பலவற்றைச் செய்கிறது ஞாலம். அதன் கதியில் மாற்றமோ, சிந்திக்கும் ஆற்றலோ ஞாலத்திற்கு இல்லை. செயல்நிகழ் இடமாகவும் கருவியாகவும் அமையுமேயன்றிக் கருத்தாவாகும் தலைமைப்பேறு ஞாலத்திற்க இலது. ஆனால், அறிவுசால் மனிதனோ, வேண்டும் பொழுதை தெரிந்து காலத்தையுங் கருவியாக்கி வினை முடித்துத்தலைவனாகிறான். மாண்புதரும் விளைவு நோக்கி நன்மை வித்திடுகின்றான், ஆதலின், சிறியதால் பெரிது விளைக்கின்றமையால் அந்நன்றியே பெரிது உருவு கண்டு எள்ளிச்சிறிதெனச் செப்பாது, மாண்பு நோக்கிப்பெரிதென்று பேசுகஎன்கிறார் இறைமைப் புலவர்.

முதற் பாட்டிலே, குறியெதிர்ப்பை நீரதற்ற உதவியினை உரைத்தவர், இப்பாட்டில் மன்பதைத் தொண்டாம் நன்றியின் மாண்பு மலர்விக்கிறார் மாமேதை வள்ளுவனார்.

---

A help timely, Though small, transcends the world. (V. R. R.) *

குறள்நெறிப் பாடல்.

## செய்ந்நன்றி மறவாதே!

(ஆசிரியர், ப. கண்ணன்)

இராகம்-ஆனந்த பைரவி. தாளம்-ஆதி.

**எடுப்பு.**

நன்றியை மறப்பது நன்றல்ல நண்பனே
நன்றல்லதை யன்றுடன் மறந்திடுவாய்-செய்த (நன்)

**தொடுப்பு.**

கொன்றன்ன இன்னாதவை செய்யினும் அவர்செய்த
ஒன்றுநன் றெண்ணுக வந்ததுயர் மறையும் (நன்)

**படுப்பு.**

காலத்தினால்செய்த நன்றிசிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிதெனும் அறமே (நன்)

**முடிப்பு.**

சீலத்தின் செம்மையிது செய்ந்நன்றி மறவாதே!
சிந்தையில் வைக்காமலே நிந்தனையடையாதே (நன்)

**சந்தம்.**

தினைத்துணைவுதவியை புரியினும் தூயவர்
பனைத்துணையளவென பரிவுடன் போற்றுவர். (நன்)

# பயன் தூக்கார்...

புலவர்; இரா. சாரங்கபாணி, எம் ஏ; எம். லிட்.
தமிழ்ப் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

குறள்-3. பயன் தூக்கார் செய்தஉதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (103)

[பரிமேலழகர்: பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்— இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தலிலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின்; நன்மை கடலின் பெரிது - அதன் நன்மை கடலினும் பெரிதாம என்றவாறு.

இவை மூன்று பாட்டானும் முறையே, காரணம் இன்றிச் செய்ததூஉம்; காலத்தினுல் செய்த தூஉம்,பயன் தூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.]

கருத்து: தனக்கு நன்மை வரும் என்று கருதாமல் பிறர்க்குச் செய்யும் உதவி கடலைக் காட்டிலும் மிகப் பெரியது.

விளக்கம்: இக்குறள், பிறர்க்கு உதவி செய்பவர் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டும் என்றும்,உதவி பெறுபவர் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும்என்றும் காட்டுகிறது. 'பயன் தூக்கார் செய்த உதவி' என்ற தொடரால், உதவி செய்பவர் யாதொருபயனையும் கருதாமல் உதவி செய்ய வேண்டும் என்பது பெறப்படும். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவர் நோக்குமாதல் வேண்டும்.

இவ்வுலகிற் செய்த நன்மை இம்மையிலோ மறுமையிலோ வந்து உதவும் எனனும் தன்னல நோக்கொடு உதவி செய்தலாகாது. ''இம்மைச் செய்தது மறுமைக்காம், எனும் அறவிலை வணிகன் ஆய் அலன'' என்னும் புறநானூற்று அடிகள் ஈண்டு ஒப்பு நோக்கத் தகும

'நன்மை கடலிற் பெரிது' என்னும் தொடர், உதவிபெற்றவர் அவ்வுதவியைச் செய்த அளவாகக் கருதாமல், அதனினும் பன்மடங்கு பெரிதாக—கடலினும் அளவிற் பெரிதாக நினைத்தல் வேண்டும் என்று அறிவிக்கின்றது. உதவி பெற்ற அளவுக்குத் திரும்ப அதனைச் செய்த அளவிலே அந்நன்றியுணர்ச்சி முடிந்து விட்டதாகக் கருதலாகாது; நாம் எவ்

வளவு நன்மை செய்தாலும் அதற்கு ஈடாகாதுஎன மனத்துட்கொண்டு, என்றும் நன்றி உடையவராய் இருத்தல் வேண்டும்.

நன்றி மறத்தல் பாவங்களிலெல்லாந் தலையாயது என்பது வள்ளுவர் கருத்து. புறநானூறும் வள்ளுவர் வாய் மொழியைத் தழுவி,

'ஆன்முலை யறுத்த அறமில்லாதவரும்,
மாணிழை மகளிர் கருச்சிதைத்தவரும்.
குரவரைக் கொன்ற கொடியவரும்
உய்ந்தாலும் உய்யலாம்; ஆனால்,
செய்ந்நன்றி கொன்றவர் ஒருகாலும் உய்ய முடியாது'

என்று புகன்றுள்ளது.நன்றி மறத்தலாகாது என்பதை வற்புறுத்த வந்த செந்நாப் போதார், ஒருவர் செய்த நன்றி சிறிதாயினும் பெரிதாகக் கருதிப் போற்றியொழுக வேண்டும் என்று கூறுவாராயினர்.

உதவி செய்வோர் கைம்மாறு கருதாது செய்க; பெறுவோர், பெற்ற சிறிதாயினும் மாணப் பெரிதாக மதித்து என்றும் நன்றியுடையாராகுக.

---

Help done expecting no return, ib weighed, will be vaster than the sea.

(V. R. R.) *

## பயன் கருதாப் பேருதவி.

"உலகில மக்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்வதை நாள் தோறும் கண்டு களிக்கின்றோம். ஆனால் அப்படி ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்வதற்கு ஏதேனும் காரணம் உண்டோ?" எனச் சிறிது ஆழ்ந்து எண்ணின், அக்காரணம் சிற்சில சமயங்களில் நமக்குப் புலனாகலாம், புலனாகாமலும் போகலாம். எப்படியிருப்பினும் ஒருவர் ஏதோ ஒரு பயன் கருதியே மற்றொருவருக்கு ஓர் உதவிசெய்ய முற்படுகிறார் என்பது மாத்திரம் நன்குதெரிகின்றது. மக்களாகப் பிறந்துள்ள எல்லோர்க்கும் நம்மாலான உதவிசெய்வதே நம் கடமைஎன எண்ணும்பெரியோர்களும் உலகில்உண்டு. இக்கருத்தையே மேனாட்டுப்புலவராகிய கோல்டுஸ்மித் என்பவா, 'To do good is a duty we owe to all our fellow creatures' எனத் தாம் எழுதியுள்ள 'விகார் ஆப் வேக்பீல்டு' என்னும் சிறந்த நூலில் கூறியுள்ளார். இவ்வண்ணம் யாதொரு பயனையும் கருதாமல் பெரியோர்கள் செய்யும் உதவியின் பெருமையைத்திருவள்ளுவர் தம் உள்ளத்தால் எண்ணியெண்ணி உவந்து, அவ்வுதவியினால் உண்டாகும் நன்மை கடலினும் பெரிது எனக் கட்டுரைக்கின்றார்:

"பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

—கு. மதுரையார்,
"திருவள்ளுவர் இல்லறம்"

# தினைத்துணை நன்றி...

பேராசிரியர், கே. எம். வேங்கடராமையா.
எம். ஏ; பி. ஓ. எல்.
முதல்வர், செந்தமிழ் கல்லூரி,
திருப்பனந்தாள்.

குறள்-4 தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (104)

[பரிமேலழகர்:- தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின பயன தெரிவார் என்றவாறு.]

இக்குறள் பரிமேலழகர் உரை வரிசையில் நான்காவது குறளாகவும், மணக்குடவர் உரை வரிசையில் ஆறுவது குறளாகவும் அமைந்துள்ளது.

உரை: ஒருவன் தினையத்தனை உதவி செய்தாலும், அதனைப் பனையத்தனை உதவியாகக் கருதுவர்; (யார் எனின) அவ்வுதவியின் பயனை அறிபவர்கள்.

நம் கையிலுள்ள பொருள் கீழே நழுவி விழுகிறது. அதனை ஒருவர் எடுத்துக் கொடுக்கிறார்; அவர்க்கு நன்றி செலுத்துகிறோம். விரைவூர்தியில் ஏறுகிறோம்; ஒருவர் நகர்ந்து இடம் கொடுக்கிறார்; அவர்க்கும் நன்றி செலுத்துகிறோம். இத்தகைய சிறிய உதவிகளுக்கே மனபதைகள் நன்றி செலுத்துவதானால், ஆபத்துக் காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச் சிறிதேயாயினும், அதன பயனை நோக்கி, அவ்வுதவியை மிகப் பெரியதாகவே மக்கள் கருதுவர்.

''தினை,'' ''பனை'' என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டும் அளவைகள் என்பர் பரிமேலழகர். மணக்குடவர் ''பனையளவு அதன் உயர்ச்சி'' எனபர்.

ஔவையாரக்குக் காட்டில் ஓர் இடையன் ஆட்டுப் பாற்சோற்றை அளித்தனனாம். ஔவையார் அவனை அவன் பெயர் கேட்டார். தன் பெயர் தெரியாத அவன் ''அசதி'' என்றனனாம். ''ஊர் எது'' என்று வினவ ''எம் ஊரில் ஐந்து வேலுண்டு'' என்று விடை யிறுத்தனனாம்.

ஔவை, தனக்கு அவன் சோறளித்த நன்றிக்காக "ஐவேலசதி" என்றமைத்து "அசதிக் கோவை" என்ற நூலைப் பாடினர். இது, சோமேசர் முதுமொழி வெண்பாவிற் கண்டது:-

"பன்னும் அசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே ஔவைமுன்பு சோமேசா—மன்னுத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயனதெரி வார்."

வேதாரண்யத்துச் சிவாலயத்தில் மங்கும் நிலையிலிருந்த ஒரு விளக்கை ஓர் எலி தூண்டியது. இச்சிறு செயலுக்காகச் சிவபெருமான் அவ்வெலிக்கு மறுபிறவியில் அரச பதவி வழங்கினர். இஃது "நிறை மறைக்காடு தன்னில்" என்ற அப்பர் தேவாரத்திற் கண்ட செய்தி ஆகும். இதனைக் கமலை வெள்ளியம்பலவாணர் தமமுடைய 'முதுமொழிமேல் வைப்பு' என்னும் நூலில் பின்வருமாறு எடுத்தாண்டிருக்கிருர்:—

"எள்ளளவு காணு(து) எலிசெய்த நன்றிக்கா
வள்ளல் உலகாள வைத்தருளும்-நல்லாய்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

***

ஒப்புமைப் பகுதி.

"தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்ருேர்"—நாலடி. 344.

"தான் சிறியதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்துவிடும்"—நாலடி. 38.

"ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே"—கம்ப; பால. ஆற்று 30.

---

The benefit recieved may be small even like a tiny millet seed, but in the eyes of the worthy its measure is that of a palmgra tree. (V. V. S.) *

## தமிழறிந்தவன்?

"தமிழ் இலக்கியத்தின் தலையணியாகிய திருக்குறளை ஓதியுணர்ந்தாலல்லது, தமிழறிந்தவன் என்று எவனும் கூறிக் கொள்ள முடியாது என்பதில் ஐயமின்று"

—ஃபிரெடெரிக் பின்காட்.

# உதவி வரைத்தன்று உதவி...

திரு. அப்துர் ரகுமான். எம்: ஏ.
தமிழ் விரிவுரையாளர்,
இசுலாமியக் கல்லூரி, வாணியம்பாடி.

குறள்-5. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

[பரிமேலழகர்:- உதவி உதவி வரைத்து அன்று—கைம்மாருன உதவி காரணத்தானும், பொருளானும், காலத்தானும் ஆகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று; உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து—அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று என்றவாறு.

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று, உதவியும் அவ்வளவு பெரிதாம் என்பார், 'சால்பின் வரைத்து' என்றார்.]

பொருள்:- ஒருவர் செய்த உதவி, அவ்வுதவியின் அளவினை உடையதன்று; அதனைப் பெற்றுக்கொள்வோர்தம் தன்மையின் அளவினை உடையதாம்.

கருத்து:- நல்லோர் தமக்குச் செய்த சிறு உதவியையும் பெரிதாக எண்ணிப் போற்றுவர். புல்லரோ தமக்குச் செய்த பேருதவியையும் சிறிதாக எண்ணுவர். வான் உதவும் மழைநீர் வளமான வயலில் வீழ்ந்தால் பயிராகிப் பயன் தருகின்றது; வெறுந்தரையில் வீழ்ந்தால் சேருகிறது; குளத்தில் வீழ்ந்தால் குடிநீராகிறது; கடலில் வீழ்ந்தால் உப்பாகிறது. உதவி ஒன்றாயினும், அடைந்த இடத்திற்கேற்பப் பயன் வேருகிறது.

சிற்றுண்டிச் சாலையில் உண்டு முடித்த பின்னர், தாம் பணப்பையைக் கொண்டு வரவில்லை என்பதை அறிந்து ஒருவர் தவிப்பதாகவும், அருகிலிருந்த ஒருவர் அவர் தவிப்பைக் குறிப்பாக உணர்ந்து அவர்க்குரிய தொகையையும் சேர்த்துச் செலுத்திவிடுவதாகவும் வைத்துக் கொள்வோம். இங்குச் செய்யப்பட்ட உதவி சிறு தொகையன்று; (தொகை அளவிற் சிறியதாக விருப்பினும்) ஒருவர் மானமே காக்கப் பெறுகிறது. உதவி பெற்றவர் உயர்ந்தவராயின் இதனைத் தன் மானம் பேணிய பேருதவியாக மதித்துக் கல்லெழுத்தாக நினைந்திருப்பார். இழி

தகையோராயின், "ஏதோ சில காசுகள்தானே கொடுத்தார்; அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் சரியாய்ப் போகிறது." என்றுதானே எண்ணுவர்? இவ்வுதவிக்குக் கைம்மாறு செய்ய நினைத்தால், உதவி செய்தவர் இதேபோல் மானமிழக்கும் நிலையிலிருந்து,பல ஆயிரம் ரூபாய்கள் இருந்தால்தான் அந்நிலையிலிருந்து அவரைக் காக்க முடியும் என்றிருந்தால், அப்பெருந்தொகையைச் செலுத்தி உதவுவதே ஒருவகையில் கைம்மாறு செய்வதாகும். ஏனெனில், காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிதன்றோ?

சால்புடையாரே இங்ஙனம் எண்ணுவர் என்பதனையே முன் குறளில், தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார் எனக் கூறினர். இதனின்றும், சால்பு குறைந்தோர் பனைத்துணை நன்றி செயினும் தினைத்துணையாகக் கொள்வர் என்பது பெறப்படும். உதவி பெற்றும் தீமை இழைக்கின்ற தீயவரும் உளர். கழிநீரை ஊற்றினும் தென்னை இளநீரையே தரும்; தேனையே ஊற்றினும் எட்டி கசப்பைத்தானே கொடுக்கும்?

"தீயோர்க்குச் செய்யும் உதவி நல்லோர்க்குச் செய்யும் நலிவினும் ஆபத்தானது." (Doing a favour for a bad man is quite as dangerous as doing an injury to a good one) எனத் தீயோர்க்குச் செய்யும் உதவியின் நிலையை அழகுறக் கூறுகிறார் ப்ளாடஸ் (Plautus) என்பார்.

திருமால் வாமனக் குறளனாக வந்து வானுற ஓங்கி வளர்ந்த காட்சியை வருணிக்கும் கம்பர்,

"வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே" என உதவி,சால்பின் வரைத்தாகும் இயல்பை இனிது கூறுகிறார்.

சிறு உதவியையும் பேருதவியாகக் கருதிப் போற்றும் நன்றியுணர்வே சான்றாண்மையின் இலக்கணம் என்பதை இக்குறள் இனிது விளக்குகிறது.

---

Help has no measure of its own. Its worth is as much as the worth of the recipient. (M. S. P)

# மறவற்க மாசற்ருர்...

திரு. அ. தாமோதரன். எம். ஏ;
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

குறள்-6, மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106)

[பரிமேலழகர்:- துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினரது நட்பை விடாதொழிக; அறிவு ஒழுக்கங்களில் குற்றமற்ருரது கேண்மையை மறவாது ஒழிக.

கேண்மை கேளாந்தன்மை. இம்மைக்கு உறுதி கூறுவார் மறுமைக்கு உறுதியும் உடன் கூறினுர்.]

ஆசிரியர் உரை:- மனவிருள் நீங்கப் பெற்றுப் பண்பால் மேம்பட்ட ஆன்ருேர் கேண்மையை மறத்தல் கூடாது; இழுக்கல் உடையுழி ஊன்றுகோலென துன்பத்தில் வலியாவார் நட்பினைத் துறத்தலும் கூடாது. இவ்வொறன்றி ஆங்கு (அதுபோல) என்ற உவம இடைச் சொல்லை இடைப்பெய்து எடுத்துக் காட்டுவமை யணியாக்கி உரை காணலும் பொருந்தும்.

இப்பாடலின் கருத்தாழத்தை—உள்ளார்ந்த பொருளைப் பொருட்பாலின் நட்பியல் பின்னணி நன்கு விளக்கதலன்றிப் பொருட் பொலிவைத் தருகிறது என்றும் கூறலாம். சிறப்பாக;

"மருவுக மாசற்ருர் கேண்மை யொன் றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு" (800) என்ற இப்பாடல் குறிப்பிடற்குரிய வொன்று. இங்ஙனம் இவ்விரு பாடல்களையும் ஒருங்கியைத்துக் காணும்போது மருவ வேண்டிய நட்பு எது? மறக்க வேண்டிய நட்பு எது? உள்ளவேண்டிய நட்பு எது? ஒருவ வேண்டிய நட்பு எது? தொடர வேண்டிய நட்பு எது? துறக்க வேண்டிய நட்பு எது? என்று எளிதில் விளங்கும். ஆயின், இக்குறட்பாக்களின் பாலியலதிகார வேறுபாடு உணர்த்தும் கருத்துதான் என்ன? இதற்குரிய விடையைக் காண்பதுவே வள்ளுவர் உள்ளத்தை நெருங்கித்தொடும் முயற்சி எனலாம்.

எனவே, இவ்வமைப்பினுல், நன்றி என்பது ஊதியம் தரும் உத விக்கு அல்லது நன்மைக்கு உரிய செயல் மட்டுமன்று; செயற்கரிய நட் பும் நன்றிக்கடன்பாட்டிற்குரிய நன்மை என்பதையும், நன்றி பேணலும் நன்றி கொல்லலும் செயலின் பாற்பட்டவை மட்டுமல்ல, மனதாலும் இயலக் கூடியன என்பதையும், நட்பும் ஒருவகை நன்றியாதலின், நட்புக் கோறல் உய்தியில் குற்றம் என்பதையும் நாம் அறியலாம்.

இனி இக்குறளின் வாக்கிய அமைப்பும் (Sentence Construction) மொழி நிலையும் பயனுடையனவாகும். தமிழில் வாக்கிய இறுதியில் பயனிலை நிற்றல் பெரும்பான்மையாகும். ஆனுல், இக்குறளில் பயனிலைகள் வாக் கியத் துவககத்தில் நிற்கின்றன. இந்த முறைமாற்றம் கருத்து வலி யுறுத்தலுக்குரிய உத்தியாகப் பயன் படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. திருக்குறளில் எதிர்மறை வியங்கோள் வினை முற் றுக்கள் பெரும்பாலும் வாக்கியத் துவக்கத்தில் நிற்றல் இக்கருத்தை அரண் செய்யும். மேலும், அறநூல் அமைதிக்கும் இக்கருத்து பொருந் தக் கூடிய ஒன்றே. பொதுவாக எதிர்மறை வியங்கோள் வினைமுற்று வடிவங்கள் (மற+அல்+க) சங்க இலக்கியங்களில் அருகியும் திருக் குறளில் பயின்றும் காணப்படுதல் மொழிநிலை ஆய்வர்களுக்குப் பயன் தரும் செய்தியாகும்.

பரிமேலழகர் இவ்விரு (106, 800) குறட்பாக்களின் விசேட உரை களிலும் இம்மை மறுமைகளை இயைத்துக் கூறியவை அறிந்தின் புறத்தக்கது.

---

Forget not the benevolence of the blameless., forsake not the friendship of those who have been on your staff in adversity. (R. D)

---

## உதவியில் மூவகை.

இன்சொற்களைக் கூறி மக்களை மகிழ்விக்கும் மாண் புடையோர் செய்ந்நன்றி மறவாது வாழ்தல்வேண்டும் என் பது திருவள்ளுவரது திருவுள்ளம். அவரது திருவுள்ளத் தின்படி இல்லறத்தில் நின்று இனிய அறங்களைச் செய்யும் பெரியோர் இம்மையில் புகழையும் மறுமையில் புண்ணி யத்தையும் பெற்று விளங்குவர்.

பிறர்க்குப் பயன்பட்டுப் பேரறங்களைச் செய்யத்தோன் றியுள்ளநல்லோர், பிறர்க்குச் செய்யும் உதவிகளைத் திரு வள்ளுவர் மூவகையாகப் பிரித்துக் கூறியுள்ளார். அவை செய்யாமற் செய்த உதவி, காலத்தினுற் செய்த நன்றி, பயன்தூக்கார் செய்த உதவி.

—கு. மதுரையார்
'திருவள்ளூர் இல்லறம்'

# எழுமை எழுபிறப்பும்...

பேராசிரியர், திரு. மு. வேங்கடசாமி, எம். ஏ;
தமிழ்த்துறைத் தலைவர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

குறள்-7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (107)

[பரிமேலழகர்:- தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர் என்றவாறு.

'எழுமை' என்றது வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை; அது வளையாபதியுட் கண்டது. எழுவகைப் பிறப்பு மேலே உரைத்தாம். (குறள் 62) விரைவு தோன்றத் 'துடைத்தவர்' என்றார். நினைத்தலாவது; துன்பம் துடைத்தலான் அவர் மாட்டு உளதாகிய அன்பு பிறப்புத் தோறுந் தொடர்ந்து அன்புடையராதல்.

இவை இரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாது என்பது கூறப்பட்டது.]

பொருள்:- தமக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கியவருடைய நட்பை, நல்லோர் என்றென்றும் தம் நினைவில் வைத்துப் போற்றுவர்.

விளக்கம்:- தமக்கு ஒரு துன்பம் நேர்ந்த காலத்தில் அதை நீக்கத் துணையாக இருந்தவர்களின் நட்பினை விடலாகாது, என ஆறும் குறளில் கூறிய வள்ளுவர், இக்குறளில் அதனை மேலும் வலியுறுத்துவதற்காக, அவ்வாறு தம் துன்பத்தை அடியோடு அகற்றியவர்களின் நட்பினை 'எல்லாப் பிறவிகளிலும்' நினைக்க வேண்டும் என்று கூறுகிறார்.

"ஒருவர் செய்த நன்றியை ஏழு பிறவியிலும் நினைத்து உருக வேண்டியது கடமையாயிருக்க, இவ்வொரு பிறவியிலாவது இறுதிவரை நினைத்தல் வேண்டுமன்றோ?" என்பது உட்கருத்து.

'தம்' என்றும், 'உள்ளுவர்' என்றும் பன்மையில் கூறியிருப்பதால், 'நல்லோர்' என்பதைத் தோன்றா எழுவாயாகக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வேழாங் குறளில் எழுமை எழு பிறப்பு என்று, எழிளைப் பற்றியே கூறப்பட்டிருத்தல் எண்ணி மகிழ்தற்குரியது.

* "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து"
(அடக்கமுடைமை-6)

* "ஒருமைக்கண் தான்கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து"—(கல்வி-8)

என்னும் இருகுறள்களிலும் 'எழுமை' என்பது எழுபிறப்புக்களைக் குறிக்கிறது

* "எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"—(மக்கட்பேறு-2)

என்னும் குறளில் "ஒருவனுக்கு வினை வயத்தால் ஏழு பிறவிகள் ஏற்படும்" என்று குறிப்பிடுகிறார். தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர், தேவர் எனப் பிறவிகள் ஏழாம். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்பது மணிவாசகர் வாக்கு.

'எழுமை' என்பதற்கு 'Seven births' என்றும், 'எழு பிறப்பு' என்பதற்கு 'Seven kinds of births' என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

'எழு' என்பதை 'எழுதல்' எனக் கொண்டு, எழு பிறப்பு.' என்பதற்கு, 'இனிமேல் தோன்றும் பிறப்புக்கள்' என உரைத்தார் நாகை திரு. சொ. தண்டபாணிப் பிள்ளை அவர்கள். இதற்கு மணக்குடவர் உரை சான்றாக அமைகிறது.

'விழுமம்' என்பது 'துன்பம்' என்ற பொருளைத் தரும் என்று தொல்காப்பிய நூற்பா கூறுகிறது.

'துடைத்தவர்' என்று இறந்த காலத்தால் கூறினர் எனினும், துடைப்பவர், துடைக்கின்றவர் ஆகிய இருவரையும் உட்கொண்டே அவ்வாறு கூறினர். துன்பம் தோன்றியவுடனே அதை நீக்கிவிடுவதால 'துடைத்தவர்' என்று, செயலின் விரைவு தோன்ற உரைத்தார்.

'தங்கண் விழுமம் துடைத்தவர்' என்னும் தொடரை, 'தம்+கண் விழும்+அம் துடைத்தவர் எனப் பிரித்து, 'தம் கண்களிலிருந்து விழுகின்ற கண்ணீரைப் போக்கியவர்'என்று உரை கூறினர் இராமானுஜ கவிராயர். இதை நாகை, திரு. சொ. தண்டபாணிப் பிள்ளை மறுத்து எழுதியுள்ளார்.

தமக்கு நன்மை செய்தவர் அவ்வாறே பிறருக்கும் செய்வாராகையால், அந்நல்லோர் நட்பினை உள்ளத்தில் போற்றித் தாமும் பிறர் துன்பத் துடைத்தலைக் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து.

---

The good will remember with gratitude, all through seven births the friendship of those who have wiped out their suffering. (V. R. R.)

# நன்றி மறப்பது...

ஆசிரியர், மொ. காளியப்பன் எம். ஏ., பி. டி.,
அரசினர் உயர்நிலைப்பள்ளி, சலகண்டபுரம்.

குறள்-8 நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (108)

[பரிமேலழகர்:- நன்றி மறப்பது நன்று அன்று-ஒருவன்முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று; நன்று அல்லது அன்றே மறப்பது நன்று-அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன் என்றவாறு. இரண்டும் ஒருவனுற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு ]

பொருள்:- ஒருவன் முன்செய்த நன்றியை மறவாமையும், தீமையை மறப்பதுவுமே அறமாகும்.

விளக்கம்:- திருவள்ளுவர் அறத்தின் வாயில்களாக உரைப்பவை மூன்று. அவை மனம், மொழி, செயல் என்பன. இல்வாழ்வான் அன்புணர்வினனுய் இருத்தல் வேண்டும். இத்தன்மைதான் இல்வால்வின் அடிபடையியல்பு. அந்த அன்புணர்வு விருந்தோம்பும் செயலில் மலர வேண்டும். இது செயலறம். அச்செயல் இன்சொல்லொடு இயங்க வேண்டும். இது மொழியறம். இவ்விரண்டும் மனத்தால் ஒன்றியனவாய் அமைதல் வேண்டும் பிறர் செயலையும், சொல்லையும் துணைகொண்டு வாழ்வில் உயர்பவன் அவற்றை எண்ணியெண்ணி உள்ளத்தில் நன்றி உணர்வால் நினைந்தவனுய் நற்செயலாகிய நடுநிலை நிற்கும் ஆற்றல் பெறுதல் வேண்டும். நன்றியுணர்வே மனவறம்; இச்செயலுக்குத் தெளிவூட்டும் சக்தி.

மனத்தின் இயல்பு இருதன்மைத்து. ஒன்று நினைவில் தோன்றியவற்றை மறக்கும் இயல்பு. மற்றொன்று மறவாது போற்றும் இயல்பு. இவ்விரு வியல்பும் எல்லோரிடத்தும் இருப்பவை. இவ்விரு இயல்பும் மனிதவாழ்வின் சிறந்த பண்புகள். பிறந்தது முதல் சாகும்வரை ஒருவன் காண்பன, கேட்பன, உணர்வன எண்ணற்றவை. எல்லா நிகழ்ச்சிகளையும் மனம் நினைத்துக் கொண்டிருந்தால் மனம் தெளிவு பெருது. அறை ஒன்றில் நிறைய பொருள்களைக் குவித்து விடுவதால் அறை சிறப்புருது. வேண்டாத பொருள்களை வெளியேற்றி வேண்டியவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்தால் அறைக்கு அழகு ஏற்படும். நாமும் அறையிலிருந்து

இன்புறலாம். மனத்திலும் வேண்டாதவற்றை நீக்கி வேண்டியவற்றை நிலைநிறுத்தினால் மனம் தெளிவுறும். மன அழகு தோன்றும். ஆகவே வள்ளுவனார் நன்மையல்லாத நினைவுகளை நீக்கி நன்மைதரும் நினைவுகளைப் போற்றி வாழ்வதே ஒருவன் வாழ்வாங்கு வாழும் முறை என்பதை இக்குறள் வாயிலாகத் தெளிவுறுத்துகின்றார்.

இராமாயணம், பாரதம் போன்ற காவியங்களில் இந்த நன்றி உணர்வின் சிறப்பை விளக்க வந்த பாத்திரங்கள் இரண்டு. ஒருவன் கும்பகர்ணன். விபீடணன் இராமன் பக்கம் வரவேண்டி எவ்வளவோ காரணங்களைக் காட்டியபோதும் தன் அண்ணன் செய்த நன்றியைக் கொல்லமாட்டேன் என்ற அறத்தைக்காட்டி அவ்வழி நின்று புகழ்பெற்றவன் இவன். மற்றவன் பாரதத்தில் வரும் கர்ணன். குந்தி தன் மகனாகிய கர்ணனை அவனுடைய உடன்பிறந்த ஐவருடன் சேர அழைத்தாள். உடன்பிறப்புப் பாசத்தைவிட நன்றியுணர்வே வழிபடற்கு உரியது என தன் தாய்க்கே விளக்கம்கூறி நன்றியுணர்வின் வழிநின்று செஞ்சோற்றுக் கடன் கழித்துச் சிறப்புற்றவன் கர்ணன். இவ்விருவரும் நன்றிமறவாதப் பண்பை எந்தச் சூழ்நிலையிலும் ஒருவன் கடைப்பிடித்து வாழவேண்டும் என்ற அறநெறிக்குக் கலங்கரை விளக்கம் ஆவர்.

---

It is ignoble to forget a kindness., but an injury received, it is the part of mobility to forget atonce. (V. V. S) *

## குறள்நெறியில் நடந்திருந்தால்...

'தமிழ் மக்கள் திருக்குறளிடத்து இன்று காட்டும் ஆர்வத்தில், அக்கறையில் இவ்வளவு நாளாய் நூற்றில் ஒரு பங்கு காட்டி வந்திருப்பரேல், இன்றுள்ள இழிநிலையை அடைந்திருக்கமாட்டார்கள். தமது முன்னோர் போலவே குறள் நெறியில் நடந்துவந்திருப்பாரேயானால், இத்தனையித்தனை சாதிப் பிரிவாலும், சமயச் சளக்காலும் தமிழர் இவ்வாறு சீர்குலைந்திருக்க மாட்டார்கள்.'

—புலவர், குழந்தை,
"திருக்குறளும் பரிமேலழகரும்"

வாழ்க வள்ளுவம்! வளர்க குறள்நெறி!

இனிய முறையில் குறள்நெறி பரப்பும்
புதியதொரு கலைப்படைப்பு!

# குறள்நெறி இசையரங்கு.

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலுக்கும் அதிகாரத்திற்கு ஒன்றாக ஆசிரியர். ப. கண்ணன் அவர்கள் இயற்றியுள்ள குறள் நெறிப் பனுவல் களின் இன்னிசை விருந்து. புதிய முறை விளக்கத் தோடு, கர்நாடக சங்கீத பாணியில் பக்கமேளத் துடன் நிகழ்வது, திருக்குறள் கருத்தும் சுவையும் கொழித்திடும் தமிழ் இசைக் கச்சேரி.

பாடுநர்:- இசைவாணர், டி. பி. பாலகிருஷ்ணன்

விளக்குநர்:- ஆசிரியர், ப. கண்ணனார்

திருவள்ளுவர்—திருக்குறள் கழக விழாக்கள், மாநாடுகள், இலக்கிய மேடைகள், திருமணம் போன்ற சிறப்புக்களில் நடத்துதற் கேற்றது.

விரும்புவோர் தொடர்புகொள்க;—

தலைவர்: குறள்நெறி கலைக்குழு,
30 பெரிய கடைவீதி,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

# கொன்றன்ன இன்னா...

பைந்தமிழ்ப் புலவர், அ. கி. பரந்தாமனார். எம். ஏ;
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

குறள்-9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று ள்ளக்கெடும். (109)

[பரிமேலழகர்:- கொன்று அன்ன இன்னா செயினும்-தமக்கு ஒரு நன்மை செய்தவர் பின்கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாரா யினும்; அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்—அவை யெல்லாம் அவர் செய்தநன்மை யொன்றனையும் நினைக்க, இல்லையாம் என்றவாறு.

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்கும் என்பதாம்.]

கருத்து:- முன் ஓர் உதவியைச் செய்தவர், பின் பல தீமைகளைச் செய்தாலும், அவை முன் செய்த உதவியை நினைத்து மறந்துவிடல் வேண்டும்.

இதனால் ஒருவர் செய்த தீமையை மறக்க வழி—உபாயம்—கூறப்பட்டது.

விளக்கவுரை: கொன்றன்ன—கொன்ற அன்ன, அகரம் தொக்கது; இன்னா-(தீமைகள்) பலவின்பால் குறிப்பு வினையாலணையும் பெயர், ஒன்று-(ஒரு நன்றி) ஆகுபெயர், நன்று-குறிப்பு வினையெச்சம்.

பரிமேலழகர்: "அவர் செய்த நன்று ஒன்று" என்று கொண்டு, 'அவர் செய்த நன்மை ஒன்றனையும்' என்று பொருள் கூறினார்.

காளிங்கர்.'ஒருவர் தம்மைக் கொல்லும் கொலைக்கு மேற்பட்டதோர் இன்னாமை இல்லை. மற்று அதுபோலவே பொல்லாங்கு செயினும், அவர் முன்பு செய்தது ஒன்றேயாயினும் நன்றி உளதாயின்; அதனைச் சிந்திக்கவே எல்லாக் குற்றமும் தீரும் செய்ந்நன்றி அறிவார்க்கு' என்று வேறுபடப் பொருள் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்குச் சிறப்பாக உள்ள பண்புகள், மானம், இடப்பற்று, பொறுமை, நன்றி மறவாமை என்பனவாம். நன்றி மறவாமை என்பது, ஒருவர் தமக்குச் செய்த நன்றியை மறவாதிருத்தல். இப்பண்பு, நம் தமிழ்மக்கள் சங்ககாலம் தொட்டு இன்று வரைகடும் மேற்கொண்டு வந்திருக்கும் நல்ல அறப்பண்பாகும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூறும் இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, 'நிலம் புடை பெயர் வதாயினும் ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தியில்லென அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்று அற நூல் கூறியிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளது. இத்தகைய அறப்பண்பை ஒருவர் மறத்தலாகாது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதுதான்; போற்றிக் காத்துக் கொள்ளவேண்டிய பண்புதான். ஆனால், முன் பலஉதவிகளைச் செய்தவன் பின்பு கொன்றன்ன தீமைகளைச் செய்தால், இனிமை கூறி இல்லறம் வழுவாதான் அவற்றைப் பொறுத்துக் கொள்வதா? முன் பல உதவி செய்தவன், தன் மனைவி, மகள், அன்றித் தங்கையின் கற்பைக் கெடுக்க முனைந்தால், உதவி பெற்றவன் அத்தீங்கைப் பொறுத்துக் கொள்வதா? செய்ந்நன்றி மறவாமையை வற்புறுத்திய வான்புகழ் வள்ளுவர், 'அந்நன்றி செய்தவனிடம் அவன் செய்த உதவியை நினைத்து, நடுவு நிலைமையாக நடந்து கொள்வதைச் சிதைத்துக் கொள்ளலாகாது'-என்று அடுத்த நடுவு நிலைமை அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளாரே, அவ்வாறாயின், கொன்றன்ன இன்னா செய்யினும் முன் உதவி செய்தவனிடம் அவன் செய்த பொல்லாங்கைப் பொறுத்துக்கொண்டு அப்பொல்லாங்கை மறந்துவிடுமாறு சொல்வது அறமாகுமா? அறங் கூறிய அறிஞரான பொய்யாமொழியார் இக்குறளில், கொன்றன்ன இன்னா செய்யினும் அவன் செய்த உதவி ஒன்றை நினைத்து இதை மறந்துவிட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். கடுமையான நிலையிலும், முன்உதவி செய்தவன் பின்செய்த தீமையை அறமனத்தோடு பொறுத்துக்கொள்வதோடு, அதை மறந்துவிடவும் வேண்டும் என்று இக்குறளில் வற்புறுத்தலைக் கண்டுணர்க.

இத்தகைய அறத்தை வற்புறுத்துவதிலேதான் வள்ளுவர் பெருமை இன்று நிலைத்து நிற்கிறது.

---

The deadliesst deed'. straight forgot, By a single benefit's thought. (S. M. M.) *

# எந்நன்றி கொன்றார்க்கும்...

புலவர், பொன். கோதண்டராமன்.
(பொற்கோ) எம். ஏ; பி. ஓ. எல்,
அண்ணாமலை நகர்.

குறள்-10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)

[பரிமேலழகர்:— பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை.

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது: ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், குரவர்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல், இதனால் செய்ந் நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது.]

உரைநடைப் போக்கு: உய்வு எந்நன்றி கொன்றார்க்கும் உண்டாகும்: (ஆனால்) உய்வு செய்ந்நன்றி கொன்ற மகனுக்கு இல்லை.

இலக்கணம்: எந்த நன்றி கொன்றார்க்கும் என்பது எந்நன்றி கொன்றார்க்கும் எனவும், உண்டு ஆகும் என்பது உண்டாம் எனவும், செய்த நன்றி என்பது செய்ந் நன்றி எனவும், மகனுக்கு என்பது மகற்கு எனவும் நின்றன.

விளக்கம்: நன்றிகொன்றார்க்கு உய்வு உண்டாதல் இல்லையாயினும், செய்ந்நன்றி தவிர ஏனையவற்றுள் எந்த நன்றியைக்கொன்றாராயினும் அவர்க்கு உய்வு உண்டாதல் கூடும் என்பார், 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' என்றார். நன்றி என்பது முதல் அடிக்கண் 'நன்மை' என்ற பொருளிலும், ஈற்று அடிக்கண் 'பிறர் தனக்கு நன்மை செய்ததில் தோன்றும் ஒரு உணர்வு (நன்றியுணர்வு) என்ற பொருளிலும் நின்றது. நன்றியைக் கொல்லுதலாவது, நன்மையைக் கொடுத்துக் கைவிடுதல். நன்றி கொல்லுதல் என்பதற்கு பெரிய அறங்களைச் சிதைத்தல் என்று குறிப்பார் பரிமேலழகர். எல்லா நன்மைகளையும் 'அறம்' என்ற சொல் தன்னுள் அடக்கி நிற்பதை எவரும் மறுத்ததில்லை. அஃது எல்லோர்க்கும் ஒத்தமுடிபு. "வினைப்பகை வியாது பின் சென்று அடும்,— (குறள். 207) ஆதலின், நன்றி கொன்றார்க்கு உய்வுண்டு என்னாது எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் என்றார். செய்தது செய்ததேயா

குமன்றிச் செய்யாததாக யாண்டும் மாறுவதின்மையானும், மீண்டும் எய்துதல் இயலாமை யானும் 'கொன்ளுர்க்கும்' என்ருர். செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்ற குறிப்பும் அது.

'செய்தி கொன்ருேர்க் குய்தியில் லென
அறம் பாடிற்றே' என்ருர் ஆலத்தூர் கிழார்.

'மகற்கு' என ஆண்பாலாற் கூறினுரேனும் பெண்பாலும் கொள்ளப் படும். 'கொன்ருர்க்கு' என்றும், 'கொன்ற மகற்கு' என்றும் இறந்தகாலத் தாற் கூறினுரேனும், மூன்று காலமும் கொள்ளப்படும்.

தெளிவு: நன்றியுணர்வைக் கெடுத்துத் தொலைத்த கொடியோர்க் குத் தப்புகின்ற வாயில் எங்கும், என்றும், எந்த வகையிலும் இல்லை.

சிந்தனைக்கு: செய்ந்நன்றி என்றதொடர் 'செய்தநன்றி' எனப்பிரித் துப் பொருள் கூறப் பெற்றது. இத்தொடர் வினைத்தொகைபோல நிற் றல் கவனிக்கத்தக்கது. இதனை, வினைத்தொகை என்று கொண்டால், 'செய் நன்றி' எனப் பாடங்கொள்ள இயலுதுமேயன்றி 'செய்ந்நன்றி' எனக் கொள்ள இயலாது. 'எந்நன்றி' என்ற தொடருக்கேற்பச் 'செய்ந் நன்றி' என ஒற்றுமிக்கு நின்றது என்பதும் அமையும். வினையடியும் பெயரும் தொடருங்கால் ஒற்று மிகுவதில்லை. ஆறைகடல், வெல்போர், கொல்களிறு, தாழ்குழல் என்பவற்றுள் ஒற்று மிகாமை காண்க. செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம், 'ஓடாக் குதிரை' என்பது போல, எதிர்மறைக்கண் ஈறு கெட்டுப் புணரு மெனினும் உடன்பாட்டில் ஈறு கெட்டுப் புணர்தல் இல்லை. எதுகை நோக்கியே 'செய்நன்றி' என்பது 'செய்ந்நன்றி' என நின்றதா, வேறு ஏதாவது விளக்கம் உண்டா என் பதைத் தமிழ்ப் பேரறிஞர்களின் சிந்தனைக்கு விடுவோம்.

***

ஒப்புமைப் பகுதி:

''நின்ருேடிப் பொய்த்தல் நிறைதொடீஇ செய்ந்நன்றி
கொன்ருரிற் குற்ற முடைத்து'' (நாலடி. 111)

''நன்றி, செய்குநர்ப்பிழைத்தோற் குய்விலவென்னும்
குன்ருவாய்மை. (கல்லாடம். 4)

''பிறர் புரிந்த நன்றியது கொல்லினும்- நரகில் எய்துவார்.
(வில்லி. கிருட். 109)

''நானே முனிபோரில் எந்நன்றியினும் செய்ந்நன்றி
கொன்ருர் தமக்குக் குருகுலத்தார் கோவே! யாமுங்கூட்டு
என்ருர்'' (வில்லி 12 ம்போர்-43)

''நன்றியைக் கொன்று நின்ருேன்'' (திருவிளை. அங்கம் 14)

— ஆசிரியர்

He who has killed every virtue may yet escape., there is no escape for him who has killed a benefit. (R. D) *

# குறள் மலர்

## குறள் அறம் பரப்ப வாரீர்!
## அறம் வளர்ப்போர் அணி.

* புரவலர்.

உரூபா 500-ம் அதற்கதிகமாகவும் மலருக்கு அன்பளிப்பாக மனமுவந்து வழங்கும் புரவலர்கள் இத்தொகையை மொத்தமாக அன்றி, 5 தவணைகளில் வழங்கலாம்.

* பேராதரவாளர் :

உரூபா 100 ஆயுள் கட்டணமாக வழங்கிப் பேராதரவாளராகி திருக்குறள் முழுவதுமான 133 அதிகார மலர்களையும், திங்கள் ஒன்றுக்கு 5 மலர்கள் பெற்று நண்பர், மாணவர்க்கு அன்பளிப்பாக ஈந்து, கல்வி அறமும் குறள் நெறியும் வளர்ககலாம்.

* ஆதரவாளர்:

திங்கள் ஒன்றுக்கு ஒரு உரூபா வழங்கி, 5 மலர்கள் பெற்றுத் தாமும் மகிழ்ந்து, நண்பர்கட்கும் அன்பளிப்பாக மலர் தந்து, மற்றவர்களையும் மமிழ்விப்போர் ஆதரவாளர், (ஆண்டுக் கட்டணமானல் உரூபா 10-போதும்)

* உறுப்பினர்:

ஆண்டுக் கட்டணமாக உரூபா 3-மட்டும் வழங்கித் திங்கள் தோறும் ஒரு மலர் பெறுவோர் உறுப்பினர்.

இந் நால்வகைகளில் தங்கள் விழைவிற்கேற்ப எவ்வகையிலேனும் "குறள் மல"ருக்கு ஆதரவு தந்து குறளறம் பேண மனமுவந்து அன்பர்கள் முன்வருக ..

ஆசிரியர்,
'குறள் மலர்'
உரிகம் அஞ்சல்,
கோலார் தங்கவயல்.
(மைசூர் மாநிலம்)

# தமிழ்க் கவிஞர்களுக்கு...

அன்பர்களே!

பாரதியும் அவருக்குப் பிறகு வந்தோரும் தந்த தமிழ்க் கவிதைகளை ஆராய்ந்து "புதிய தமிழ்க் கவிதை" என்னும் நூல் ஒன்றை நாம் (தமிழ்ப் புத்தகாலயம் மூலம்) வெளியிட்டிருப்பதை அறிந்திருப்பீர்கள். இத்துறையில் மேலும் ஆய்வு நிகழ்த்த விரும்புவதால், உங்களுடைய அல்லது உங்களுக்குத் தெரிந்த பிறருடைய கவிதை நூல் ஏதேனும் வெளிவரும்போது நூலின் பெயர், ஆசிரியர் பெயர், அதன் விலை, கிடைக்குமிடம் ஆகிய விவரங்களை ஓர் அஞ்சல் அட்டை மூலம் கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவித்து உதவுமாறு வேண்டுகிறேன். யாரும் பிரதிகளை அன்பளிப்பாக அனுப்ப வேண்டாம் என்று மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சாலை இளந்திரையன்,
3362/2, கிறிஸ்டியன் காலனி,
தில்லி-5.

செந்தமிழ் அச்சகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.